**செய்தி வெளியீடு எண் : 1721** **நாள் : 01.10.2022**

# செய்தி வெளியீடு

## மதுவிலக்கு அமலாக்கப் பணியில் சிறப்பாக செயல்பட்ட ஐந்து காவல்துறை அதிகாரிகளுக்கு காந்தியடிகள் காவல் விருது

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் (i) திருமதி த.எ.பிரியதர்ஷினி, காவல் ஆய்வாளர், மத்திய நுண்ணறிவு பிரிவு, தலைமையகம், சென்னை, (ii) திரு கா.ஜெயமோகன், காவல் ஆய்வாளர், பட்டுக்கோட்டை மதுவிலக்கு அமலாக்கப்பிரிவு, தஞ்சாவூர் மாவட்டம், (iii) திரு ச.சகாதேவன், காவல் உதவி ஆய்வாளர், மத்திய நுண்ணறிவு பிரிவு, சேலம் மண்டலம், (iv) திரு பா.இனாயத் பாஷா, காவல் உதவி ஆய்வாளர், மத்திய நுண்ணறிவு பிரிவு, விழுப்புரம் மண்டலம் மற்றும் (v) திரு சு.சிவனேசன், தலைமைக் காவலர் 1368, பாலூர் காவல் நிலையம், செங்கல்பட்டு (அயல்பணி), மத்திய நுண்ணறிவு பிரிவு (அமலாக்கம்), செங்கல்பட்டு மாவட்டம் ஆகியோருக்கு மதுவிலக்கு அமலாக்கப் பணியில் பாராட்டத்தக்க வகையில் பணியாற்றியமைக்காக காந்தியடிகள் காவலர் விருது வழங்க உத்தரவிட்டுள்ளார்கள். இவ்விருது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 2023–ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 26–ஆம் நாள், குடியரசு தினத்தன்று வழங்கப்படும். இவ்விருதுடன், பரிசுத்தொகையாக ரூ.40,000/– ஒவ்வொருவருக்கும் வழங்கப்படும்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in